**நொச்சியாகம பிரதேச சபை**
**அநுராதபுர மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 ஏப்ரல் 06 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 ஏப்ரல் 23 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நொச்சியாகம பிரதேச சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினை காசுப் பாய்ச்சலினையும் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய குத்தகை வாடகை ரூபா 292,790 என நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் குத்தகை தவணை கொடுப்பனவு ரூபா 127,893 மற்றும் குத்தகை வட்டிக் கொடுப்பனவு ரூபா 37,597 தொகை என்பன கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கேள்வி வருமான பதிவேட்டின் பிரகாரம் இறைச்சி, மீன் மற்றும் வாரச் சந்தையென 05 வியாபார நிலையங்களிலிருந்து 1992 முதல் 1994 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 51,444 தொகை நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 6,114,210 கூட்டுத்தொகையான அலுவலக உபகரணங்கள் தொடர்பாக செலுத்த வேண்டிய தொகை பொறுப்புக்களாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது சபையினால் கடன் அடிப்படையில் பெற்றுக் கொள்ளப்பட்டிருந்த ரூபா 124,550 தொகையான திரைச்சீலைகள் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) பிரதேச சபைக் கட்டிடத்தை மேம்படுத்தும் இரண்டாம் கட்டத்திற்காக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்ட வேலையின் பெறுமதி மற்றும் அதற்காக செலுத்த வேண்டிய பொறுப்புக்கள் ரூபா 12,127,903 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பிரதேச சபை வளவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த புதிய நூலக கட்டிடம், நகர சபைக் கட்டிடம் மற்றும் குசும்புர கழிவுப்பொருள் மீள்சுழற்சி நிலையம் போன்ற நிர்மாணங்களின் பெறுமதி சொத்துக்களாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 02. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் செயற்பாட்டு மிகை ரூபா 3,442,277 ஆக காணப்பட்டதுடன், அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் செயற்பாட்டு பற்றாக்குறை ரூபா 551,007 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 வீத வரி

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,643,571 ஆன நிலுவை வரியை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 158 ஆம் பிரிவின் பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.2 தொலைபேசி கோபுர கட்டணங்கள்

சபை அதிகாரப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டிருந்த 04 தொலைபேசி கோபுரங்களிலிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 396,656 தொகையான கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.3 நிலுவை கடை வாடகை

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை கடை வாடகை வருமானம் ரூபா 5,349,850 ஆக காணப்பட்டதுடன் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து நிலுவைத் தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

#### 2.2.4 குத்தகை வாடகை

(i) லிந்தவெவ கடல் மீன் பலகை மீளாய்வாண்டிற்காக ரூபா 93,000 இற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக தெரிவுசெய்யப்பட்டிருந்த குத்தகையாளர் ரூபா 31,000 தொகையான வைப்புத் தொகையினை மாத்திரம் செலுத்தி உடன்படிக்கையில் கைச்சாத்திடாமலும் ரூபா 62,000 ஆன நிலுவையைச் செலுத்தாமலும் வேறு இடமொன்றில் மீன் வியாபாரத்தை மேற்கொண்டு வந்ததுடன், இந்த அனுமதியின்றி வியாபாரத்தை தவிர்ப்பதற்காக சபையினால் எவ்வித நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 1988 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை காலப்பகுதியில் வாரச்சந்தை, மாட்டிறைச்சி கடை மற்றும் மீன் கடைகள் என்பவற்றில் நிலுவையாக ரூபா 877,015 கூட்டுத்தொகை அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும், உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவை வாடகையை அறவிடுவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே ரூபா 662,092 ஆன நிலுவைத்தொகை அறவிடப்பட வேண்டியிருந்த 07 குத்தகையாளர்களை கறுப்பு பட்டியலில் உள்ளடக்கப்படாதிருந்ததுடன் முன்னைய ஆண்டுகளில் கறுப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட்ட இரண்டு கேள்விதாரர்களுக்கு பின்னைய காலப்பகுதியில் குத்தகைக்கு வழங்கிய சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

### 2.2.5 நீர் வரி

-------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவையான நீர் வரி வருமானம் ரூபா 4,551,453 தொகையாக இருந்ததுடன், அந்நிலுவை வருமானத்தை துரிதமாக அறவிடுவதற்கு முறையான நடைமுறை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

### 2.2.6 வீட்டு வாடகை

--------------------------

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய நிலுவை வீட்டு வாடகை ரூபா 232,150 ஆக இருந்ததுடன், அப்பணத்தை அறவிடுவதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 159 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 03. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------------

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

-------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையினால் சேகரிக்கப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்ப வேண்டியிருந்த ரூபா 245,817 தொகையான 02 குத்தகைக் கணக்கு மீதிகள் 03 ஆண்டுகளை மிகைத்த காலப்பகுதியிலிருந்து தீர்வுசெய்யப்படாமல் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஆ) 2007 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பிரதேச சபைக்கு கிடைக்கப்பெற்றிருந்த ரூபா 11,876,212 தொகையான 08 வாகனங்கள் / காணி வாகனங்கள் என்பன மோட்டார் போக்குவரத்து அதிகாரச்சட்டத்தின் (203ஆம் அத்தியாயம்) 2(1) பிரிவின் பிரகாரம் பதிவு செய்யப்படாமல் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்தப்பட வேண்டியிருந்த ரூபா 908,422 தொகை உள்ளூராட்சி மன்ற ஓய்வூதிய பங்களிப்புத் தொகையை தீர்வுசெய்யப்படாமல் இருந்ததுடன் இத்தொகை 10 ஆண்டுகளை கடந்த காலப்பகுதியிலிருந்து சேர்ந்து வரும் தொகையாக இருந்தன.

(ஈ) பஹலஹல்மில்லவ கிராமசேவை பிரிவில் நீர் சுத்திகரிக்கும் செயற்திட்டத்திற்கு இறுதிக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் பொருத்தப்பட்டிருந்த ரூபா 376,500 பெறுமதியான நீர் சுத்திகரிப்பு இயந்திரம் கலற்றி அகற்றப்பட்டு வேறொரு நீர் சுத்திகரிப்பு இயந்திரமொன்று பொருத்தப்பட்டிருந்ததுடன் அவ்வியந்திரத்தின் பெறுமதி ரூபா 283,500 ஆக இருந்தமை கணக்காய்வின் போது கண்டறியப்பட்டது.

### 3.2 ஒப்பந்த நிர்வாகம்

-------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் நிதி ஏற்பாடு ரூபா 9,891,470 தொகையான 53 அபிவிருத்தி செயற்திட்ட முன்மொழிவுகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புறநெகும செயற்திட்டத்தின் கீழ் ரூபா 5,000,000 தொகையான 11 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) 2015 மாகாண நிச்சியக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய அங்கீகரிக்கப்பட்ட நிதிஏற்பாடு ரூபா 50,000,000 தொகையான 02 செயற்திட்டங்கள் மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ரலபனாவ கிராமத்தின் நிசர சனசமூக நீர் செயற்திட்டத்திற்கு நீர் சுத்திகரிப்பு இயந்திரமொன்றைக் கொள்வனவு செய்வதற்காக ரூபா 990,000 ஆன நிதி ஏற்பாட்டுத் தொகையில் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ரூபா 970,000 செலுத்தப்பட்டிருந்தது. எனினும் செயற்திட்டத்தின் குடிநீர் கிணற்றிலிருந்து தாங்கிக்கு நீரைப் பெற்றுக்கொள்வதற்கு நீர் இரைக்கும் இயந்திரம் இல்லாமையால் குறித்த செயற்திட்டத்திற்காக செலவிடப்பட்டிருந்த மொத்தக் கிரயமும் பயனற்ற செலவினமாக மாறியிருந்தது.

## 3.3 திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

(அ) உள்ளுராட்சி மன்றங்கள் அமைச்சின் நிதி மானியங்களின் கீழ் ரூபா 5,816,818 இற்கு அண்மித்த செலவில் 45X105 அடி அளவிலான கழிவுப்பொருள் மீள்சுழற்சி கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு 03 வருடங்கள் கடந்த காலப்பகுதியிருந்து எவ்வித பயன்பாட்டிற்கும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கட்டிடத்திற்கு செல்வதற்காக முறையான நுழைவு வீதியொன்று அமைக்கப்படாதிருந்ததுடன், தேசிய மின்சக்தி முறைமையிலிருந்து மின்சாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு ரூபா 1,000,000 இற்கு அண்மித்த மதிப்பீடொன்றும் சூரிய சக்தி மின்சாரத்திற்காக ரூபா 4,460,000 முதல் ரூபா 21,340,000 வரையான மதிப்பீடும் 2015 ஆம் ஆண்டின் போது சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக எதிர்வரும் நடவடிக்கையொன்றும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) கழிவுப்பொருள் மீள்சுழற்சி செயற்பாட்டிற்காக தேவையான உபகரணங்களை சபைக்கு பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### விளைவற்ற சொத்துக்கள்

(அ) பிரதேச சபைக்குரிய ரூபா 1,619,850 கூட்டுத்தொகையான 06 சொத்து உருப்படிகள் 01 ஆண்டு முதல் 03 ஆண்டுகளை மிகைத்த காலப்பகுதியிலருந்து விளைவற்றுக் காணப்பட்டதுடன் தரைப்படையின் பயன்பாட்டிலிருந்து சபைக்கு மீளக் கையளிக்கப்பட்டிருந்த கெப் வண்டியொன்று சபை வளவில் மேவுகையொன்றில்லாமல் சிதைவடைந்து காணப்பட்டு வந்தது.

(ஆ) உள்ளுராட்சி மன்ற அமைச்சிடமிருந்து 2015 ஆம் ஆண்டின் போது பிரதேச சபைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 7,967,144 ஆன வீதி மட்டப்படுத்தும் இயந்திரமொன்று வெளிக்களத்தில் போக்குவரத்துச் செய்வதற்காக பொருத்தமான வாகனமொன்று சபையிடம் இல்லாதிருந்தமையால் விளைவற்றுக் காணப்பட்டதுடன் 2016 மே 24 ஆந் திகதியில் உள்ளவாறு 144 இயந்திர மணித்தியாலங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தன.

## 04. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) வருமான நிருவாகம்
(இ) சொத்துக்கள் முகாமைத்துவம்
(ஈ) ஒப்பந்த நிர்வாகம்
(உ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்